பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 24 வெள்ளிக்கிழமை 07.05.2021 கதிர் 51

தமிழ் சிங்கள ENGLISH LANKA E_PAPER'S

## கல்வியங்காடு சந்தை முடக்கம்

(எஸ்.நிதர்ஷன்)

கொரோனா சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமையால் கல்வியங்காடு செங்குந்தா பொதுச்சந்தை மறு அறிவித்தல் வரையில் முடக்கப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

☞ 2



# இந்தியாவில் பரவுகின்ற திரிவடைந்த கொரோனா வைரஸ் இலங்கையிலும்

## வைத்திய கலாநிதி சந்திம ஜீவந்தர எச்சரிக்கை

இந்தியாவில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸின் திரிவடைந்த வைரஸ் இலங்கையில் ஒருவருக்குக் கண்டறியப்பட்டுள்ளது.

திரிவடைந்த பி.1.617 என்ற கொரோனா வைரஸே இவ்வாறு ஒருவருக்குக் கண்டறியப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

தொற்றுடன் கண்டறியப்பட்டவர் வெளிநாட்டிலிருந்து வந்தவர் எனவும், கொழும்பு தனிமைப்படுத்தல்

☞ 2

## நீரில் மூழ்கிய குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா, பம்பைமடுப் பகுதியில் உள்ள நீர்த்தேக்கம் ஒன்றில் மூழ்கி காணாமல் போயிருந்த குடும்பஸ்தர் ஒருவர் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள நீர்த்தேக்கத்துக்கு மீன்பிடிப்பதற்காக 5 பேர் சென்றுள்ளனர்.

☞ 2

## நயினாதீவில் நடைபெறவிருந்த தேசிய வெசாக் திடீரென இரத்து

### கொரோனாத் தொற்றே காரணம் என்கிறது அரசு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். நயினாதீவு ரஜமகா விகாரையில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த 2021ஆம் ஆண்டுக்கான அரச வெசாக் பிரதான விழா இரத்து செய்யப்பட்டுள்ளது எனப் புத்த சாசன, மத மற்றும் கலாசார விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாவது அலையால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞ 2

## பத்து நாள்களுக்குள் பத்தாயிரம் கட்டில்கள்



பத்து நாள்களுக்குள் பத்தாயிரம் கட்டில்கள் கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்படும் என்று பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி

☞ 2

## மேல் மாகாணத்தில் கொரோனா உச்சம்

### நேற்று மாத்திரம் 1,393 பேர் பாதிப்பு

மேல் மாகாணத்தில் கொரோனாவின் மூன்றாவது அலை ஆழ ஊடுருவியுள்ளது.

அங்கு நேற்று மாத்திரம் 1,393 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு

☞ 2

## 70 குழந்தைகளுக்கு கொரோனா வைரஸ்

சொய்சா மகளிர் வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 70 குழந்தைகள் பிறந்துள்ளனர் என்று புதிதாகப் பிறக்கும் குழந்தைகள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நளின் கமஹெதிகே தெரிவித்தார்.

அந்தக் குழந்தைகள் அனைவரையும் தனித்தனியாகவும் பாதுகாப்பாகவும் கவனித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

☞ 2

## 138 கிராம அலுவலர் பிரிவுகள் கொரோனாவால் முடக்க நிலை

இலங்கையில் ஏப்ரல் மாத புது வருடத்தைத் தொடர்ந்து தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் பரவலின் 3ஆம் அலையைத் தொடர்ந்து, இதுவரை நாட்டின் 14 மாவட்டங்களில் உள்ள 138 கிராம அலுவலர் பிரிவுகள் முடக்க நிலையில் உள்ளன.



கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இன்று காலை முதல் 21 கிராம அலுவலர் பிரிவுகள் புதிதாக முடக்கப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு

☞ 2

## கடத்தி வந்த 235 கி. கஞ்சாவை இங்கு தீயிட்ட பின் திரும்பிய 7 தமிழக மீனவர்






(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.08

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 235 கிலோ கேரளக் கஞ்சாவைக் கைப்பற்றித் தீயிட்டு அழிக்கச் செய்த கடற்படையினர் அதனைக் கடத்தி வந்த இந்திய மீனவர்கள் ஏழு பேரையும் பத்திரமாக தமிழகம் திருப்பி அனுப்பி வைத்தனர்.

தமிழகத்தில் இருந்து

☞ 2

# மக்களின் செயற்பாடுகளை அவதானித்தே கிராமங்கள் முடக்கம்!



## யாழ். வந்த சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீதரன் தெரிவிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

கிராமத்தை முடக்குவது என்பது அதிகாரிகள் தீர்மானிப்பதில்லை. மக்கள் சுகாதார நடைமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடித்தால் கிராமத்தை முடக்க வேண்டிய தேவை ஏற்படாது. எனவே, மக்களின் செயற்பாட்டின் மூலமே கொரோனாத் தொற்றில் இருந்து மீள முடியும்.

- இவ்வாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல் பிரிவு) வைத்தியர் ச.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு இன்று உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட அவர், பல்வேறு தரப்பினரையும் சந்தித்த பின்னர் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மூன்றாவது அலை திரிவடைந்த வைரஸால் ஏற்படுகின்றது. இப்போது அயல் நாடுகளில் கூட

☞ 2

## கடத்தி வந்த 235 கி. கஞ்சாவை இங்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய தினம் மீன்பிடிக்வெனத் தெரிவித்து நாட்டுப் படகில் புறப்பட்ட ஏழுபேர் படகில் 235 கிலோ கஞ்சாவை கடத்தி வந்த சமயம் கற்பிட்டிக்கும் மன்னாரிற்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் வழி மறிக்கப்பட்டு மடக்கப்பட்டனர்.

அந்த மீனவர்களை அவர்களின் படகிலேயே கற்பிட்டிக் கடற்படைத் தளத்திற்கு கொண்டு சென்ற படையினர் அந்த மீனவர்களைக் கொண்டே படகில் இருந்த கஞ்சா அனைத்தையும் இறக்கி நிறுக்கச் செய்தனர். பின்னர் அவர்களைக் கொண்டே கரையில் அவற்றைத் தீயிட்டு எரிக்கச் செய்தனர். பின்னர் அவர்களை எச்சரிக்கை செய்து, அந்த மீனவர்கள் வந்த படகிலேயே அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தனர்.

தற்போது இந்தியாவில் அதிகரிக்கும் கொரோனாத் தாக்கம் காரணமாக இந்திய மீனவர்களை இங்கு தடுத்து வைத்து சட்டநடவடிக்கைஎடுக்காமல் அவர்களை இந்தியாவிற்கே உடனடியாக திருப்பி அனுப்பி வைத்தனர் கடற்படையினர் என்று கூறப்பட்டது.

## மக்களின் செயற் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் திரிவடைந்த வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது.

குறிப்பாக 20 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்படுகின்றது. அதனால் சுகாதார அமைச்சு பல முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் பிரகாரம் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் சுகாதார அமைச்சரின் பணிப்பின் கீழ், இலங்கையிலுள்ள 9 மாகாணங்களுக்கு சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர்கள் தற்போது விஜயம் மேற்கொண்டுள்ளார்கள்.

அதன் பிரகாரம் இன்று வடக்கு மாகாணத்துக்கு நான் விஜயம் மேற்கொண்டுள்ளேன். இன்று வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும், தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளேன். அத்தோடு தற்போதைய கொரோனா முன்னேற்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளேன்.

தற்போது வவுனியா மாவட்டத்தில் ஒரு பணிப்பாளரும் மன்னார் மாவட்டத்தில் ஒரு பணிப்பாளரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு பணிப்பாளரும் தங்களுடைய விஜயங்களை மேற்கொண்டுள்ளார்கள்.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியை இன்று காலை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தேன். அவருடன் கலந்துரையாடிய பின்னர் கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்துக்குச் சென்று அங்குள்ள நோயாளிகளுடன் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் கேட்டு, அதற்குரிய தீர்வையும் வழங்கியுள்ளோம். உடனடியாக வழங்கக்கூடிய தீர்வுகளை வழங்கி இருக்கின்றேன்.

அதேபோல் கொரோனா வைரஸ் மேலும் தீவிரமடைந்து மேலும் நோயாளர்கள் இனங்காணப்படும்போது, சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்து வருவது மற்றும் சிகிச்சை நிலையங்களில் கட்டில்கள் எவ்வாறு அதிகரிப்பது போன்ற விடயங்கள் தொடர்பில் இன்று அனைவரும் இணைந்து கலந்துரையாடி இருந்தோம்.

அதன்படி யாழ். மாவட்டத்திலேயே கிட்டத்தட்ட ஆயிரம் கட்டில்களுடன் கூடிய சிகிச்சை நிலையத்துக்கான ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளோம். அதேபோல் கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தொற்று ஏற்பட்டால் அவர்களுக்கு எவ்வாறு மருத்துவ சிகிச்சை வழங்குவது, அதாவது சத்திர சிகிச்சை மேற்கொள்வது தொடர்பில் இன்று ஆராய்ந்துள்ளோம்.

அத்தோடு இது தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருடனும் கலந்துரையாடினோம். அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல் யாழ். மாவட்டத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து இரு மடங்காக அதிகரிப்பதற்கு ஆலோசித்து இருக்கின்றோம். அதுபோல் எடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளும் அந்த நாளோ அல்லது அடுத்த ஒரு நாளில் வெளியிடக்கூடிய ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளோம். இதனைவிட மக்களுக்கான கடப்பாடு ஒன்று உள்ளது.

முடக்கல் நிலை என்பதை ராணுவத்தினர் சுகாதாரப் பணியாளர்களால் தீர்மானிக்கப்படுவது அல்ல. அதாவது ஒரு கிராமத்தை முடக்குவது என்பது அதிகாரிகள் தீர்மானிப்பது அல்ல மக்கள்தான் தீர்மானிப்பது. மக்கள் சுகாதார நடைமுறைகளைச் சரியாகப் பின்பற்றி கொரோனாவிலிருந்து தங்களைப் பாதுகாப்பதன் மூலம் ஒரு கிராமத்தை அல்லது ஒரு கிராம சேவையாளர் பிரிவை முடக்க வேண்டிய தேவை ஏற்படாது. எனவே, பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயமாகப் பின்பற்றிச் செயற்படுவதன் மூலம் மாவட்டத்தை கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் - என்றார்.

## 138 கிராம .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, குருநாகல் மாவட்டத்தின், குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவில் 19 கிராம அலுவலர் பிரிவுகளைத் தவிர்ந்த ஏனைய இடங்கள் முடக்க நிலையிலிருந்து இன்று விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 70 குழந்தைக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் அனைத்து வைத்தியசாலைகளிலும் கொரோனாத் தொற்றுக்குள்ளான குழந்தைகளைப் பராமரிப்பதற்காகத் தனியே பிரிவு ஒன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

## நீரில் மூழ்கிய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் ஒருவர் நீர்த்தேக்கத்தில் இறங்கியபோது நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில் இன்று காலை கடற்படையின் சுழியோடிகள் மற்றும் பொது மக்களின் உதவியுடன் நபரின் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவத்தில் கற்பகபுரம் பகுதியைச் சேர்ந்த ரவி (வயது 50) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பத்து நாள்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இவ்வாறு குறிப்பிட்ட அவர், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்தப் பத்தாயிரம் கட்டில்களுக்கு மேலதிகமாக மாவட்ட மட்டத்தில் மேலதிக சிகிச்சை நிலையங்களை இனங்கண்டு அவற்றுக்குத் தேவையான கட்டில்களும் உபகரணங்களும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதன் பொறுப்பு மாவட்ட ஒருங்கிணைப்புதலைவர்களுக்குவழங்கப்படும் என்றும், இலங்கை பொறியியலாளர் முன்னணி வைத்தியசாலைகளின் தொழில்நுட்ப குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முன்வந்துள்ளது என்றும் பஸில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## மேல் மாகாணத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 434 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 591 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 368 பேருக்கும் இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது எனவும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேசிய வெசாக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் அரச வெசாக் வைபவத்தை வேறொரு இடத்தில் நடத்தப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் கபில குணவர்தன குறிப்பிட்டார்.

எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை யாழ். நயினாதீவில் தேசிய வெசாக் நிகழ்வு இடம்பெறவிருந்தது. எனினும், கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் மிக அமைதியான முறையில் தேசிய வெசாக் நிகழ்வை கொண்டாட ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்து.

இதற்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்நாடாளுமன்றத்தில்உரையாற்றியிருந்தனர்.

இந்நிலையில், கொரோனாத் தொற்றின் தீவிரத்தையடுத்து நயினாதீவு தேசிய வெசாக் நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது.

## இந்தியாவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையமொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இந்த வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது எனவும் வைத்திய கலாநிதி சந்திம ஜீவந்தர மேலும் கூறியுள்ளார்.

## கல்வியங்காடு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான குறித்த சந்தையில் கொரோனா சுகாதார விதிமுறைகளைப் பேணாத வகையில் சந்தை வியாபாரிகள், நுகர்வோர் ஆகியோர் செயற்பட்டமையை அவதானித்த சுகாதாரப் பிரிவினர் உடனடியாகச் சந்தையை முடக்கி வியாபர நடவடிக்கைகளுக்குத் தடை விதித்துள்ளனர்.

மறு அறிவித்தல் வரை சந்தை முடக்கப்பட்டிருக்கும் எனவும், சந்தையைச் சூழவுள்ள பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கேலிக்குரிய இடதுசாரித்துவம்

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார். இடதுசாரிகள் குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

*"இலங்கை இடதுசாரி மற்றும் சோசலிசக் கட்சிகள் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? உதாரணத்திற்கு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.), முற்போக்கு சோசலிசக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, இடது குரல் போன்றவை தொடர்பில்...?"* என்று அவரிடம் கேட்கப்பட்டது.

*"எனக்கு நம்பிக்கை இருந்தது. ஆனால் அவர்கள் இதயங்களும், மனங்களும் இனவாதத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததில் இருந்து அந்த நம்பிக்கை இல்லை. அவர்கள் இப்போது வெறும் புத்தகப் பூச்சிகளே. நெஞ்சத்தில் அவர்களும் ஏனைய இனவாதச் சிங்கள தலைவர்களைப் போன்றவர்களே. வெறுப்பு இன்றி அன்பை இதயத்தில் வைத்திருக்கும் சிங்கள மக்கள் மீதுதான் நம்பிக்கை வைத்துள்ளேன்."* – என்று பதில் கூறியிருக்கின்றார் அவர்.

தென்னிலங்கையின் இடதுசாரிக் கட்சிகள் தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி, ஒட்டுமொத்தத் தமிழர்களின் கருத்தியலும் இதுதான்.

இது, இன்று நேற்று ஏற்பட்ட கருத்தியல் அல்ல. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தை அடுத்துக் கட்டவிழ்ந்த அரசியல் நிகழ்வுகள் இந்த வரலாற்றுப் பாடத்தைத்தான் – பட்டறிவைத்தான் – தமிழினத்துக்குத் தந்து நிற்கின்றன.

நீதியரசர் விக்னேஸ்வரன் கூறிய இந்த விடயத்தையே இருபது ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் கூறியிருந்தார். அது நோக்கற்பாலானது.

*"இடதுசாரி இயக்கம் தமிழ் மக்களிடையே ஒரு பலமான அடித்தளத்தை அமைக்கத் தவறி விட்டது. தேசிய ஒடுக்குமுறையின் குரூர நிலைமைகளைப் புரிந்து கொண்டு, அவற்றைத் தங்கள் அடிநாதமாகக் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளும் அரசியல் தூரநோக்கு அவர்களிடம் இல்லாது போனதே அதன் தோல்விக்குக் காரணம் எனலாம். ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் தேசியப் போராட்டத்துக்கு மேலானதாக வர்க்கப் போராட்டத்திற்கு அவர்கள் முன்னுரிமை கொடுத்தார்கள். தமிழ் மக்களின் தேசப்பற்றுணர்வை தவறாக எடை போட்டு, அதை வெறும் இனவாதத் தேசியத்தின் பிற்போக்கு வடிவமாக முலாம் பூசினார்கள். அந்தப் போராட்டத்தின் உட்கிடையாக அமைந்த முற்போக்குப் பண்புகளையும், புரட்சிகரத் தன்மையையும் அவர்களால் இனங்காண முடியவில்லை இரண்டு இனங்களிடையே முக்கிய முரண்பாடாகத் தேசிய ஒடுக்குமுறை நிலவும்போது, தொழிலாள வர்க்க ஒன்றுபடுதல் சாத்தியமற்றது என்ற அரசியல் உண்மையை உணராது அனைத்துலகத் தொழிலாள வர்க்க ஒருமைப்பாடு பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் தேசியப் போராட்டத்தின் புரட்சிகர உட்சிடைகளை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை"* – என்று குறிப்பிட்டிருந்தார் அவர்.

இரண்டு தசாப்த காலத்துக்கு முன்னர் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் உச்சம் பெற்றிருந்த காலத்தில் இது கூறப்பட்டது. எனினும் கூட அந்தக் கருத்தியலுக்குள் புதைந்து – பொதிந்து – கிடக்கும் உண்மை அப்படியேதான் உள்ளது.

தென்னிலங்கை இடதுசாரிகளின் எண்ணங்களும், இதயங்களும் கூட நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டுவது போல பேரினவாதக் கொடூரத்துக்குள்தான் முழுமையாகப் புதைந்து கிடக்கின்றன.

*"இந்த நாட்டின் இடதுசாரிகளான சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஐம்பதுகளில் தமிழர்களின் உரிமைகளுக்காக ஆதரவுக் குரல் கொடுத்தன. ஆனால் அறுபதுகளின் தொடக்கத்திலேயே அரசியல் சந்தர்ப்பவாதத்துக்கு வளைந்து கொடுத்து, சிங்கள – பௌத்த பேரினவாத அரசியலை அரவணைத்துக் கொண்டன"* – என்று சுட்டிக்காட்டும் பாலசிங்கம் இன்னொரு விடயத்தையும் அம்பலப்படுத்துகின்றார்.

*"தமிழ் மக்களின் உரிமைகளை மறுப்பதில் அனைத்து முக்கிய சிங்கள அரசியல் கட்சிகளும் முரட்டுப் பிடிவாதத்தோடும் உறுதியோடும் தொடர்ந்து நிற்பதைக் கண்டு இன நல்லிணக்கத்துக்காகப் பாடுபடுவதில் அர்த்தமில்லை என்ற உண்மையை தமிழ் மக்கள் கசப்போடு உணர்ந்து கொண்டார்கள். சிங்கள தேசிய அரசியல் சக்திகள், தமிழருடன் ஒத்துவாழ்வதைக் காட்டிலும், எதிர்த்து நிற்பதற்காகவே தமக்குள் உடன்பாடு கண்டன"* – என்ற உண்மையையும் அவர் விளங்குகின்றார்.

சிங்களத்துக்கு அரச மொழி என்ற ஏகத் தகைமையையும் பௌத்த மதத்திற்கு முதன்மையான சிறப்புரிமையையும் வழங்கியமையோடு, முன்னர் சோல்பரி அரசமைப்பில் சிறுபான்மையினர் நலன் தொடர்பாக இருந்த சிறப்புரிமையையும் இல்லாதொழிக்கும் 1972 ஆம் ஆண்டின் குடியரசு யாப்பின் பிதாமகர்கள் கொல்வின் ஆர். டி. சில்வா உட்பட்ட இடதுசாரிகளே என்பதையும் நாம் மறக்க முடியாது.

# ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்து



சிறந்த பெறுபேறுகளைப் பெறும் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்க்கும் நிலை காணப்படுவதால் நாட்டின் அனைத்து பாடசாலைகளது ஆசிரியர்களும் அதிபர்களும் தமது பாடசாலையின் பரீட்சை பெறுபேறுகளை உயர்ந்த மட்டத்துக்குக் கொண்டு செல்ல அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் வைத்து தெரிவித்தார்.

பிரபல பாடசாலைகளுக்குச் செல்வது என்பது தற்போதைய மாணவர்களின் நோக்கமல்ல எனவும், சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தும் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்ப்பதிலேயே பெற்றோர் ஆர்வம் கொண்டுள்ளனர் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தொழில்நுட்ப பிரிவில் அதிக மதிப்பெண்களைப் பெற்ற ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் மாணவர்களான நவினி ரவிஷ்கா மற்றும் பானுக விக்ரமசிங்க ஆகிய இருவரும் அலரி மாளிகைக்கு வருகை தந்து தங்களது பெறுபேறுகளை அறிவித்த போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நவினி ரவிஷ்கா மாணவி உயிரியல் தொழில்நுட்ப பிரிவில் அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடத்தையும், பானுக விக்ரமசிங்க மாணவன் பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் அகில இலங்கை ரீதியில் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

தொழில்நுட்ப துறைக்கான சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்பதற்காக அநுராதபுரம், கிளிநொச்சி, நிகவெரடிய மற்றும் இரத்தினபுரி ஆகிய நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாத்திரமன்றி பிரபல பாடசாலைகளிலிருந்தும் மாணவர்கள் வருகை தருகின்றனர் என அதிபர் எம்.ஆர்.டீ.கசுன் குணரத்ன இதன்போது தெரிவித்தார்.

தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்பிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட தெற்காசியாவின் முதலாவது பாடசாலை ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியாகும். அங்கு 6 ஆயிரத்து 800 மாணவர்கள் கல்வி கற்பதுடன் 315 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் மாணவர்களின் பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தேங்காய் எண்ணெய் தொடர்பில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது

இறக்குமதி செய்யப்படும் சமையலுக்கான தேங்காய் எண்ணெயுடன் வேறு எந்த எண்ணெயையும் கலப்பதை தடை செய்து அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி அறிவிப்பு நுகர்வோர் விவகார அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இறக்குமதியாளர், உற்பத்தியாளர்கள், களஞ்சிய உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சமையலுக்கான தேங்காய் எண்ணெயில் வேறு எந்த எண்ணெயையும் கலக்கக் கூடாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலை சட்ட மாணவர்களுக்கு திங்கட்கிழமை பரீட்சை நடக்குமா?

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்ட பீட மாணவர்களுக்கான பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளன என மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா பெருந்தொற்று அபாயம் காரணமாக அனைத்துப் பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் என்பன காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன எனக் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாண பல்கலைக் கழக சட்ட பீட மாணவர்களுக்கன பரீட்சைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகும் என பரீட்சை நேர சூசி வெளியிடப்பட்டுள்ளது.

அதனால் நாளைமறுதினம் திங்கட்கிழமை பரீட்சைகள் ஆரம்பமாகுமா? என மாணவர்கள் மத்தியில் குழப்ப நிலை காணப்படுகின்றது.

# தமிழக மக்கள் மகிழ்வுடன்வாழ நீதி ஆட்சி மலர்தல் வேண்டும்

## என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



ஈழத் தமிழ் மக்களின் நன்றிக் கடனுக்கு உரித்தான தமிழக மக்கள் நீடித்த மகிழ்வுடன் வாழ்வாங்கு வாழும் நீதி ஆட்சி மீண்டும் மலர வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் முதலமைச்சராக நேற்று வெள்ளிக்கிழமை பதவியேற்றுள்ள மு.க.ஸ்ராலினுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இலங்கையின் கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு –

காலம் ஒரு செங்கோலை எம் கையில் தரும். இது மறைந்தும் மறையாத தமிழகத்தின் ஒளிச் சூரியன் கலைஞரின் இலட்சிய நம்பிக்கை.

ஓய்ந்தறியா உங்கள் உழைப்பால் தமிழகத்தில் மறுபடியும் தி.மு.க. ஆட்சி மலர்ந்து கலைஞரின் கனவு நிறைவேறியுள்ளது.

தமிழக மக்களின் மனங்களில் மட்டுமன்றி, அவர்களின் கனவுகளை வெல்லும் ஆட்சிப் பீடத்திலும் உங்களுக்கு சிம்மாசனம் கிடைத்துள்ளது.

ஈழத் தமிழர்களின் நீதியான உரிமைப் போராட்டக் காலத்தில் அரசியல் ஏதிலிகளாக தமிழகம் வந்த எமது மக்களை அன்பால் அரவணைத்து வரவேற்றவர்கள் தமிழக மக்கள்.

எமது நன்றிக் கடனுக்கு உரித்தான தமிழகம் நீடித்த மகிழ்வுடன் வாழ்வாங்கு வாழும் நீதி ஆட்சி மறுபடியும் மலர வேண்டும். சமன் செய்து சீர்தூக்கும் செங்கோல் ஆட்சியென அது நிலவ வேண்டும்.

எமதும், உங்களதும், தமிழக மக்களினதும் ஆழ்மன விருப்பங்களே இன்று நிறைவேறியிருக்கின்றன.

முதல்முறையாக ஆட்சிப் பீடமேறும் உங்களுக்கு ஈழத் தமிழ் மக்கள் சார்பாகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழகத்தில் மே 10 முதல் 24 வரை முழு ஊரடங்கு

## நடைமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வெளியாகின

**இதே நடைமுறைகளை முடிந்தளவுக்கு நமது நாட்டிலும் கடைப்பிடித்தாலேயொழிய இங்கும் கொரோனா பாதிப்பினையும் உயிரிழப்புக்களையும் குறைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதே பல மருத்துவர்களினதும் தனிப்பட்ட கருத்தாகும். அரசின் முடிவுகள் எவ்வாறிருந்தாலும் நாம் நம்மையும் நமது மக்களையும் பாதுகாக்க விரைந்து செயற்படுவது அவசியம்!**




தமிழகத்தில் இம்மாதம் 10 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என்று தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. புதிய முதலமைச் சராகப் பொறுப்பேற்றுள்ள மு.க. ஸ்டாலினுடைய ஆணையின் கீழாக இந்த அறிவிப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இன்று வெளியான அந்த அறிக் கையில், 'தமிழ் நாட்டில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்த, தவிர்க்க முடியாத காரணங்களின் அடிப்படையில் 10.05.2021 காலை 4.00 மணி முதல் 24.05.2021 காலை 4.00 மணி வரை இரு வாரங்களுக்கு மாநிலம் முழுவதும் முழு ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படும்' என்றும் குறித்த காலப்பகுதியில் தடைவிதிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக தகவல் வழங்கப்பட்டுள்ளது.

'மத்திய உள் துறை அமைச்சகத்தால் அனுமதிக் கப்பட்ட வழித்தடங்களைத் தவிர, சர்வதேச விமானப் போக்குவரத்திற்கான தடை மத்திய அரசால் நீடிக்கப் பட்டுள்ளதால், இதற்கான தடை தொடரும். வெளிநாடுகள் மற்றும் இதர மாநிலங்களிலிருந்து விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து மூலம் வரும் பயணிகளைத் தொடர்ந்து கண்காணிக்க, பதிவு முறை தொடர்ந்து செயல்படுத்தப்படும். இரயில் மற்றும் விமான நிலையங்களுக்கு பயணிகள் சென்று வர, பயணச் சீட்டுடன் அனுமதிக்கப்படும்.

3,000 சதுர அடி மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பு கொண்ட பெரிய கடைகள், வணிக வளாகங்கள் இயங்குவதற்கு 26.04.2021 முதல் ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது. வணிக வளாகங்களில் இயங்கும் பலசரக்குக் கடைகள் மற்றும் காய்கறி கடைகளுக்கும் ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, தனி யாக செயல்படுகின்ற மளிகை, பலசரக்குகள், காய்கறி கள், இறைச்சி மற்றும் மீன் விற்பனை செய்யும் கடை கள் மட்டும் குளிரூட்டல் (ஏ.சி.) வசதிகளை நிறுத்திவிட்டு நண்பகல் 12.00 மணி வரை இயங்க அனுமதிக் கப்படுகிறது. இவற்றில், ஒரே சமயத்தில் 50 சதவீத வாடிக் கையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும்.


DUNZO போன்ற மின் வணிக நிறுவனங்கள் மூலம் மளிகை, பலசரக்குகள், காய்கறிகள், இறைச்சி மற்றும் மீன் விநியோகம் செய்ய நண்பகல் 12.00 மணி வரை அனுமதிக்கப்படும். இவ்வாறான மளிகை, பலசரக்குகள், காய்கறிகள், இறைவிவிசி, மீன் கடைகள் தவிர இதர கடைகள் அனைத்தும் திறப்பதற்குத் தடை விதிக்கப்படுகிறது. முழு ஊரடங்கு காலத்தில் டாஸ்மாக் கடைகள் திறக்கப்படமாட்டாது.

அனைத்து உணவகங்களிலும் பொதிகள் சேவை வழங்க மட்டும் அனுமதிக்கப்படும். தேநீர்க் கடைகள் நண்பகல் 12 மணி வரை மட்டும் செயல்பட அனுமதி க்கப்படும். உணவகங்கள் மற்றும் தேநீர்கடைகளில் அங்கேயே உண்பதற்கு அனுமதியில்லை.

தங்கும் விடுதிகள் செயல்பட அனுமதி இல்லை. எனி னும், வணிக காரணங்களுக்காகதங்கும்வாடிக்கையா ளர்களுக்காகவும், மருத்துவம் சார்ந்த பணிகளுக்கு மட்டும் தங்கும் விடுதிகள் செயல்பட அனுமதிக்கப்படும். விடுதிகளில் தங்கியுள்ள வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் தங்கியுள்ள அறைகளிலேயே உணவு வழங்க வேண்டும். உணவுக் கூடங்களில் அமர்ந்து உண்பதற்கு அனுமதி இல்லை.

உள் அரங்கங்கள் மற்றும் திறந்த வெளியில், சமுதாயம், அரசியல், விளையாட்டு, பொழுதுபோக்கு, கல்வி, கலாசார நிகழ்வுகள் மற்றும் இதர விழாக்களுக்கு தடை விதிக்கப்படுகிறது. ஏற்கனவே அறிவித்தபடி, இறப்பு சார்ந்த நிகழ்வுகளில், இறுதி ஊர்வலங்கள் மற் றும் அதைச் சார்ந்த சடங்குகளில் 20 நபர்களுக்கு மேல் அனுமதி இல்லை.

மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அழகு நிலை யங்கள், முடிதிருத்தும் கடைகள் இயங்க தடை விதிக்கப் படுகிறது. திரையரங்குகள், உடற்பயிற்சிக் கூடங்கள், யோகா பயிற்சி நிலையங்கள், கேளிக்கைக் கூடங்கள், மதுக்கூடங்கள், பெரிய அரங்குகள், பொருட்காட்சி அரங்குகள், பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கைப் பூங் காக்கள், கூட்ட அரங்குகள் போன்ற பொது மக்கள் அதி கம் கூடும் இடங்கள் இயங்க அனுமதி இல்லை.




கோயம்பேடு வணிக வளா கத்தில் செயல்படும் சில்லறை வியாபார காய்கனி அங்காடிகள் செயல்பட தடை தொடர்கிறது. அதே போன்று மாவட்டங்களில் உள்ள மொத்த வியாபார காய்கனி வளாகங்களில் சில் லறை வியாபார கடைகளுக் கான தடையும் தொடர்கிறது.

அத்தியாவசியத் துறைக ளான, தலைமைச் செயலகம், மருத்துவத்துறை, வருவாய்த் துறை, பேரிடர் மேலாண்மை, காவல் துறை, ஊர்க்காவல் படை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத் துறை, மாவட்ட நிருவாகம், மாவட்ட தொழில் மையங்கள், மின்சாரம், குடிநீர், உள்ளாட்சி துறைகள், வனத்துறை அலு வலகங்கள், கருவூலங்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அலுவல கங்கள் தவிர மாநில அரசு அலு வலகங்கள்எதுவும்இயங்காது. துறைத் தலைவர்கள் பணியாளர்களுக்குத் தேவை யான போக்குவரத்து வசதிகளைச் செய்து தர வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகள் மத்திய அரசு அலுவலகங்களுக்கும் பொருந்தும்.

தனியார் அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில் நுட்ப சேவை நிறுவனங்கள் அனைத்தும் இயங்க தடை விதிக்கப் படுகிறது. விதி விலக்கு அளிக்கப்பட்ட தொழிற்சாலைகள் தவிர பிற தொழிற்சாலைகள் இயங்க தடை விதிக்கப்படு கிறது. வீட்டில் இருந்தபடி பணியாற்றும் முறையை அவை பின்பற்றலாம். அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் பொது மக்கள் வழிபாட்டிற்கு அனுமதி இல்லை. எனினும், தினமும் நடைபெறும் பூசைகள், பிரார்த்தனைகள், சடங்குகளை வழிபாட்டுத் தல ஊழியர்கள் மூலம் நடத்துவதற்குத் தடையில்லை. குடமுழுக்கு மற்றும் திருவிழா நடத்த அனுமதி வழங்கப்படாது.

நீலகிரி மாவட்டம், கொடைக்கானல், ஏற்காடு போன்ற அனைத்து சுற்றுலாத் தலங்களுக்கும் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் செல்ல எல்லா நாள்களிலும் தடை விதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கடற்கரைப் பகுதி களிலும் பொதுமக்களுக்கு அனுமதி இல்லை. பூங்காக்கள், உயிரியல் பூங்காக்கள் மற்றும் தொல் லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்கள், அகழ்வைப்பகங்கள் மற்றும் அருங்காட்சியகங்க ளுக்கும் பொதுமக்களுக்கு அனுமதி இல்லை.

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், அரசு மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்கள், கோடைகால முகாம்கள் ஆகியவை இயங்க அனுமதி இல்லை. நீச்சல் குளங்கள், விளையாட்டுப் பயிற்சிச் சங்கம் மற்றும் குழுமங்கள் செயல்பட அனுமதி இல்லை.

மாவட்டங்களுக்குள் மற்றும் மாவட்டங்களுக்கிடை யேயான தனியார், அரசு பஸ் போக்குவரத்து மற் றும் வாடகை டாக்ஸி, ஓட்டோக்கள் ஆகியவற்றிற்கு தடை விதிக்கப்படுகிறது.

அத்தியாவசியப் பணிகளான திருமணம், முக்கிய உறவினரின் இறப்பு, நேர்முகத் தேர்வு, வேலைவாய்ப்பு போன்றவற்றிற்கும், மருத்துவமனை செல்வதற்கும் உரிய ஆவணங்களுடன் பயணிப்பவர்கள் அனுமதிக் கப்படுவர்.

முழு ஊரடங்கின் போது உணவு விநியோகம், மளிகை, பலசரக்குகள், காய்கறிகள், இறைச்சி மற்றும் மீன் விநியோகம் செய்யும் மின் வணிக நிறுவனங்கள் தவிர ஏனைய மின் வணிக நிறுவனங்களின் சேவைக ளுக்கு அனுமதி இல்லை.

மாநிலம் முழுவதும் அமுலில் இருக்கும் முழு ஊரடங்கின்போது செயற்படுவதற்கு சிறப்பு அனுமதி வழங்கப் படும் விடயங்கள் தொடர்பிலும் தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பணிகளான பால் விநியோகம், தின சரி பத்திரிகை விநியோகம், தனியார் விரைவுத் தபால் சேவை, மருத்துவமனைகள், மருத்துவ பரிசோதனைக் கூடங்கள், மருந்தகங்கள், அம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்தி சேவைகள் போன்ற மருத்துவத்துறை சார்ந்த பணிகள், சரக்கு வாகனங்களின் போக்குவரத்து, விவசாயிகளின் விளை பொருள்களை எடுத்துச் செல் லும் வாகனங்கள், ஒக்சிஜன் வாயு எடுத்துச் செல்லும் வாகனங்கள், எரிபொருளை எடுத்துச் செல்லும் வாகனங்கள் ஆகியவை முழு ஊரடங்கின்போது அனுமதிக்கப்படும். வேளாண் உற்பத்திக்கு தேவை யான பூச்சிக்கொல்லி, உரம், விதை விற்பனை செய்யும் கடைகள், மாட்டுத்தீவனம் விற்பனை செய் யும் கடைகள் போன்றவை காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை இயங்க அனுமதிக்கப் படும்.

முழு ஊரடங்கு அமுலில் உள்ள நாள்களில், உண வகங்களில் காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் பொதிகள் சேவை மட் டும் அனுமதிக்கப்படுகிறது. மின் வணிகம் மூலம் உணவு விநியோகம் செய்யும் நிறுவனங்களும் இந்த நேரங்களில் மட்டும் செயல்பட அனுமதிக்கப்படுகின்றன. சாலையோர உணவகங்கள் திறப்பதற்கு அனுமதிக் கப்படமாட்டாது.

அம்மா உணவகங்கள் தொடர்ந்து செயல்படும். காய்கறி மற்றும் பூ விற்பனை செய்யும் நடைபாதைக் கடைகள் நண்பகல் 12 மணி வரை அனுமதிக்கப்படும். நியாய விலைக் கடைகள் காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை செயல்படும். தன்னார் வலர்கள் வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், நோயுற்றவர்களுக்கான சேவைகளை வழங்குபவர்கள் தாங்கள் தொடர்புடைய நிறுவனங்கள் வழங்கும் அடையாள அட்டை மற்றும் ஆவணங்களுடன் சென்று வர அனுமதிக்கப்படுகிறது.

(7ஆம் பக்கம் பார்க்க...)

## விண்வெளியில் இருந்து

# கட்டுப்பாட்டை இழந்து திரும்பும் சீன ராக்கெட்

## பூமியில் இன்று விழப்போவதாக தகவல்

விண்வெளியிலிருந்து கட்டுப்பாட்டை இழந்து திரும்பி வந்து கொண்டிருக்கும் சீன ரொக்கெட் பூமியில் இன்று விழும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

விண்வெளியில் சீனா தனியாக தியான் காங் என்ற பெயரில் விண்வெளி நிலையத்தை அமைத்து வருகிறது.

இந்த விண்வெளி நிலையத்துக்கு மிகப்பெரிய கலத்தை கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி லாங் மார்ச் 5பி என்ற ரொக்கெட் மூலம் சீனா செலுத்தியது.

இந்நிலையில் இந்த ரொக்கெட் கட்டுப்பாட்டை இழந்து பூமியை நோக்கி திரும்பி வந்த வண்ணம் உள்ளது.

இதுகுறித்து முதன்முறையாக கருத்து தெரிவித்த சீனா லாங் மார்ச் 5பி ரொக்கெட் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழையும்போது அதன் பெரும்பாலான பகுதிகள் எரிந்துவிடும் என்பதால் வானியல் நடவடிக்கைகள் அல்லது பூமிக்கு எந்த ஆபத்தும் ஏற்பட வாய்ப்பில்லை' என்று தெரிவித்துள்ளது.





# பசுமை இல்ல வாயுக்களை அதிகளவில் வெளியேற்றும் நாடுகளில் சீனா முதலிடம்

சுற்றுச்சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் பசுமை இல்ல வாயுக்களை அதிகளவில் வெளியேற்றும் நாடுகளின் பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது.

உலக நாடுகள் கார்பன் டை ஆக்சைடு, நைட்ரஸ் ஒக்சைடு, மெதேன் போன்ற பசுமை இல்ல வாயுக்களை அதிகளவு வெளியேற்றுவதால் பூமியின் வெப்பநிலை அதிகரித்து பருவநிலை மாற்றத்துக்கு வழிவகுக்கிறது.

உலகிலேயே அதிக அளவில் கார்பன் உமிழ்வை கொண்ட நாடுகளாக அமெரிக்காவும், சீனாவும் உள்ளன. சீனா 27 சதவீதமும், அமெரிக்கா 11 சதவீதமும் கார்பன் டை ஆக்சைடை வெளியேற்றுவதாக ரோடியம் (Rhodium) குழுமத்தின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



# பெல்ஜியத்தில் பிரான்ஸ் எல்லைக் கல் ஏழரை அடி நகர்த்தி வைத்த விவசாயி

பெல்ஜியத்தில் விவசாயி ஒருவர் பிரான்ஸ் எல்லையை சுமார் ஏழரை அடி நகர்த்தியது சர்வதேச அளவில் பூதாகரமாகியுள்ளது.

1819 ஆம் ஆண்டு பெல்ஜியம் - பிரான்ஸ் இடையே எல்லையை பிரிக்கும்போது வைக்கப்பட்ட கல்லை 7.5 அடிக்கு விவசாயி நகர்த்தியதால் பிரான்ஸ் 1,000 சதுர அடி நிலத்தை இழந்ததாக அந்த வழியே நடைபயிற்சி மேற்கொண்ட வரலாற்று ஆய்வாளர் தெரிவித்தார்.

இதனையடுத்து சர்வதேச எல்லை மாறிப்போனதாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வன அதிகாரி ஒருவர் விவகாரத்தை பெரிதுபடுத்தினார். இதனையறிந்த எர்குயிலின்னஸ் மாகாண மேயர் டேவிட், விவசாயி தவறுதலாக கல்லை இடம்மாற்றி வைத்துவிட்டார் எனவும், அவரைக்கொண்டே அந்த கல் மீண்டும் பழைய இடத்தில் வைக்கப்படும் எனவும் பிரச்சினையை சுமுகமாக தீர்த்துவைத்தார்.

# சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல்




சீனாவின் வுகான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசெம்பர் இறுதியில் முதன் முறையாக கொரோனா பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. இதன்பின் உலக நாடுகளுக்கு பாதிப்புகள் பரவின. இவற்றில் அமெரிக்கா அதிக அளவில் பாதிப்புகளை சந்தித்து வருகிறது.

கொரோனா பாதிப்பு பெருந்தொற்று என கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு வெளியிட்டது. பல்வேறு நாடுகளிலும் கொரோனா வைரஸால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள சூழலில் அதற்கான தடுப்பு மருந்துகளை கண்டறியும் பணியும் நடந்தது.

உலக நாடுகளை உலுக்கி வரும் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த தடுப்பூசிகள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. அமெரிக்காவின் பைஸர் தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டிற்கு பயன்படுத்த உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது. வளர்ந்த நாடுகளில் பைஸர் தடுப்பூசி அதிக அளவில் பயன் படுத்தப்படுகிறது.

இதேபோல் அஸ்ட்ராஜெனேகா-ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் இணைந்து தயாரித்த கொவேக்ஸ் தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டிற்கு பயன்படுத்த உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டிற்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்மூலம் சீனாவில் தயாரான தடுப்பூசிக்கு முதல் முறையாக உலக சுகாதார நிறுவனத்தின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதே சமயம் உலக சுகாதார நிறுவனத்தின் ஒப்புதலைப் பெற்ற 6ஆவது தடுப்பூசி இதுவாகும்.


சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியின் செயல்திறன் 79 சதவீதம் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

மற்ற தடுப்பூசிகளைப் போலவே இதுவும் 3 முதல் 4 வாரங்கள் இடைவெளியில் இரண்டு டோஸ்களாக செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 22 நாடுகள் இந்த தடுப்பூசியைப் பயன்படுத்தி வரும் நிலையில் உலக சுகாதார அமைப்பும் ஒப்புதல் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் நண்பன் என்ற முறையில் அமெரிக்கா உதவிகளைச் செய்கிறது

## கமலா ஹாரிஸ் தெரிவிப்பு



உலக அளவில் கொரோனாத் தொற்றின் முதல் அலையின் போது அமெரிக்கா அதிக பாதிப்புகளை சந்தித்தது. அந்த சமயத்தில் இந்திய அரசு சார்பில், அமெரிக்காவிற்கு பல்வேறு மருத்துவ உதவிகள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்நிலையில் இந்தியாவில் தற்போது கொரோனாத் தொற்றின் 2வது அலை மிகத் தீவிரமாக பரவி வருகிறது.

இதன் காரணமாக தினசரி கொரோனா பாதிப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், இந்தியாவிற்கு தேவையான மருத்துவ உதவிகளை செய்ய பல்வேறு நாடுகள் நேசக்கரம் நீட்டியுள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா உள்ளிட்ட 40இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு மருத்துவ உபகரணங்கள் அனுப் பப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அமெரிக்காவின் துணை அதிபர் கமலா ஹரிஸ், இந்தியாவிற்குகொரோனா நிவாரணம் வழங்குவது குறித்து வொஷிங்டனில் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

உங்களில் பலருக்கு தெரியும், என் குடும்பத்தின் தலைமுறைகள் இந்தியாவில் இருந்து வந்தவை. என் அம்மா இந்தியாவில் பிறந்து வளர்ந்தார். எனது குடும்ப உறுப்பினர்கள் இன்றும் இந்தியாவில் வசித்து வருகின்றனர்.

இந்தியாவில் கொரோனா நோய்த் தொற்று மற்றும் இறப்புகள் அதிகரித்து வருகின்றமை இதயத்தை நொருக்குவதாக உள்ளது. கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்

இந்தியாவின் நலன் அமெரிக்காவிற்கு மிகவும் முக்கியமானது. இந்தியாவில் நிலைமை மோசமடைய தொடங்கியதும் எங்கள் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தது. கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி, அதிபர் ஜோ பைடன் இந்திய பிரதமருடன் பேசினார். அதை தொடர்ந்து ஏப்ரல் 30ஆம் திகதிக்குள், அமெரிக்க இராணுவம் மற்றும் பொதுமக்கள் இந்தியாவிற்கு தேவையான நிவாரணங்களை அனுப்ப தொடங்கி விட்டனர்.

அதே சமயம் அறிவுசார் சொத்து விதிகளில் இருந்து கொரோனாத் தடுப்பூசிக்கான காப்புரிமையை விலக்கி வைக்கும் நிலைப்பாட்டிற்கு, அமெரிக்கா தனது ஆதரவை தெரிவித்துள்ளது. இதன் மூலம் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தங்கள் குடிமக்களுக்கு விரைவில் தடுப்பூசிகளை செலுத்த முடியும்.

அமெரிக்காவிற்கு தேவையான காலத்தில் இந்தியா உதவியது. தற்போது இந்தியாவின் நண்பன் என்ற முறையில் அமெரிக்கா உதவிகளை செய்து வருகிறது. கடந்த ஒரு வாரத்துக்குள் 6 விமானங்களில் உதவிப்பொருள்கள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் இந்தியாவிற்கு தேவையான உதவிகளை செய்வதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



## அம்பாறையில் வாகன விபத்து

அம்பாறை பொலிஸின் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியை விபத்துக்கு உள்ளாக்கிய கெப் ரக வாகனத்தின் சாரதி மது போதையில் இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் அரச அதிகாரி ஒருவர் என இனங்காணப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடக பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

வாகன விபத்து தொடர்பில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

பொலிஸ் மோட்டார் சைக்கிளில் மற்றுமொரு அதிகாரி உடன் பயணித்துக் கொண்டிருந்த போது அம்பாறை பொலிஸின் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி நேற்றைய தினம் (07) குறித்த விபத்திற்கு முகம் கொடுத்திருந்தார்.

இதேவேளை, நேற்றைய தினத்தில் மாத்திரம் 6 பேர் வாகன விபத்துக்களால் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடக பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

மழையுடனான காலநிலை காரணமாக இத்தினங்களில் அதிக வாகன விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்முனை பிரதேச செயலகம்

# தமிழ் மக்களின் இருப்பினை தக்க வைப்பதற்கான விடயம்

### விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவிப்பு

கல்முனை பிரதேச செயலகம் என்பது தமிழ் மக்களின் இருப்பை தக்க வைப்பதற்கான ஒரு விடயம். அதை அவ்வாறுதான் அனைத்து அரசியல்வாதிகளும் பார்க்க வேண்டுமே ஒழிய தேவையற்ற விதத்தில் ஒரு பிரச்சார நோக்கத்திற்காக இதை பயன்படுத்துவது என்பது உண்மையிலேயே ஏற்றுக்கொள்ள முடியாது என பிரதமரின் மட்டக்களப்பு–அம்பாறை மாவட்டங்களுக்கான இணைப்பாளர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

இன்று செங்கலடியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், தற்பொழுது அண்மையில் அதிகமாக பேசப்படுகின்ற விடயம் இந்த கல்முனை பிரதேச செயலகம் விடயம்.

கடந்த காலத்தில் இந்த கல்முனை பிரதேச செயலக பிரச்சினையை சிறந்த முறையில் முன்னெடுத்து ஜனாதிபதி மற்றும் உரிய அமைச்சர்களுக்கு பிரதம மந்திரி மற்றும் பல துறை சார்ந்த அதிகாரமிக்க அமைச்சர்களிடம் அனைவரிடமும் நாம் இந்த விடயம் தொடர்பாக முன்னெடுத்து வந்தோம். இந்த வேலைத் திட்டம் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது உண்மையில் அம்பாறை மாவட்ட மக்களுக்கு எங்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகூட இது நீண்டகால பிரச்சினையாக உருவெடுத்து தற்பொழுது முடிவுறும் தருவாயில் இதற்கான முடிவுகளை நிறைவேற்றும் அல்லது முடிவுறும் கட்டத்தில் அரசு தள்ளப்பட்டுள்ளது. இதை அறிந்து கொண்டு பல அரசியல்வாதிகள் இதை அரசியலாக்கி அம்பாறை மாவட்ட மக்களின் வாக்குகளை கவர்வதற்காக இந்த பிரதேச



செயலகத்தை பயன்படுத்தி இன்று அனைவரின் வாயைத் திறந்தால் அதுதான் கதையாக உள்ளது.

இது அம்பாறை மக்களின் வாக்கு பிரச்சினை அல்ல எமது இனத்தின் இருப்பை பாதுகாப்பதற்கான ஒரு பிரச்சினை ஆகவே இந்த இடத்தில் இதற்கு பிள்ளையார் சுழி போட்டவன் நான். இது தொடர்பாக எங்களுடன் சேர்ந்து அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்பதை நான் இந்த இடத்தில் கேட்டுக் கொள்கிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## திருமலையின் சில பகுதிகள் முடக்கம்

**(ஹஸ்பர் ஏ ஹலீம் )**

திருகோணமலை மாவட்டத்தில் அதிக கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டதைத் தொடர்ந்து பல கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், திருகோணமலை நகர்ப் பகுதியில் மருந்தகங்கள், அத்தியாவசியத் தேவைகளுக்கான பொருள்கள் விற்பனைகள் தவிர்ந்த அனைத்து கடைகளும் மூடப்பட்டுள்ளன. இதனால், திருகோணமலை மாவட்டத்தின் நகர்ப் பகுதி, மூதூர், கந்தளாய் மற்றும் கிண்ணியா ஆகிய நகரப் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

இதேவேளை, திருகோணமலை நகரமானது முற்றாக முடக்கப்படும் என்ற வதந்தி சமூக ஊடகங்களில் பரவிவந்ததால் மக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.



## திருகோணமலையில் மாத்திரம் 17 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் மிக வேகமாக பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் பணியாற்றும் 70 இற்கும் மேற்பட்ட தாதியர்கள் குறித்த தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் இதுவரை சுமார் 70 இற்கும் அதிகமான தாதியர்கள் பல்வேறு வைத்தியசாலைகளில் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளமை முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளன என அரசாங்க தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப் பிரிய தெரிவித்தார்.

இதில், திருகோணமலை வைத்தியசாலையில் 17 தாதியரும், ராகமை வைத்தியசாலையில் 8 தாதியரும், கேகாலை வைத்தியசாலையில் நான்கு தாதியரும், குருணாகல் வைத்தியசாலையில் மூன்று தாதியரும், கராபிட்டிய வைத்தியசாலையில் நான்கு தாதியருமாக நாட்டில் பல வைத்தியசாலைகளில் இருந்து கொவிட் தொற்றுக்குள்ளான தாதியர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## திருகோணமலை மாவட்டத்தில் இன்று வரை 18 பேர் மரணம் –1,831 பேருக்கு கொரோனா

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 18 பேர் கொரோனாவினால் மரணித்துள்ளனர் எனவும், 1,831 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் அதிக மரணங்கள் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இடம்பெற்றுள்ளன எனவும் திருகோண மலை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் இன்று காலை 10 மணிக்கு வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியிலேயே 07 மரணங்கள் சம்பவித்துள்ளன என உப்புவெளி பகுதியில் ஆறு மரணங்களும், மூதூரில் இரண்டு மரணங்களும், கந்தளாயில் இரண்டு மரணங்களும், கிண்ணியாவில் ஒரு மரணமும் சம்பவித்துள்ளது.

அத்துடன் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் இரண்டு மரணங்கள் திருகோணமலை மற்றும் உப்புவெளி சுகாதார வைத்திய பிரிவில் இடம் பெற்றுள்ளன.

இதேவேளை நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் இன்று காலை பத்து மணி வரைக்கும் 68 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதில் 18 பேர் திருகோணமலை நகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வருகின்றது.

மேலும் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் எட்டு பேரும், குச்சவெளி பிரதேசத்தில் 8 பேரும், கந்தளாய் பகுதியில் 7 பேரும், மூதூரில் 07 பேரும், பதவிசிறிபுர சுகாதார வைத்திய பணிமனைகுட்பட்ட பகுதியில் 7 பேரும், குறிஞ்சாங்கேணி பகுதியில் 5 பேரும், தம்பலகாமத்தில் 5 பேரும், கோமரங்கடவல பிரதேசத்தில் இருவரும், கிண்ணியாவில் ஒருவரும் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.ஜீ எம். கொஸ்தா தெரிவித்தார்.

## மட்டக்களப்பு பகுதியில் கடுமையான நடவடிக்கை

### சுகாதார நடைமுறையினை பின்பற்றாதவர்களுக்கு

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார நடைமுறையினை பின்பற்றாதவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியினை தொற்றின் மூன்றாவது அலையின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பது தொடர்பான விசேட கொவிட் செயலணிக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதன், மாநகரசபையின் பிரதி ஆணையாளர் சிவராஜா மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், மட்டக்களப்பு தலைமையக காவல் துறையினர் என பலர் கலந்து கொண்டனர். இதன்போது தொற்றின் மூன்றாவது அலையின் காரணமாக நாடு படுமோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கும் நிலையில் மட்டக்களப்பு மாநகரை அதிலிருந்து பாதுகாப்பது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

சுகாதார நடைமுறைகளை கடுமையாக்கவும் அதனை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதுடன் சுகாதார நடைமுறைகளைப் பேணாத வர்த்தக நிலையங்களை மூடுவது தொடர்பிலும் ஆராயப்பட்டது. சுகாதாரப் பிரிவினர் முன்னெடுக்கும் தடுப்பு செயற்பாடுகளுக்கு மாநகரசபையின் முழுமையான ஆதரவினை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மாநகர முதல்வர் தெரிவித்தார்.

# இந்தியாவில் கோரதாண்டவமாடும் கொரோனா 10 நாள்களில் உலகிலேயே அதிக உயிரிழப்புக்கள்



இந்தியாவில் கடந்த 10 நாள்களில் மொத்தம் 36,110 பேர் கொரோனா பாதிப்பினால் உயிரிழந்துள்ளனர் என தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இது ஏனைய நாடுகளை விடவும் மிக அதிகமாகும். சராசரியாக ஒரு மணித்தியாலத்திற்கு 150 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியா முழுவதும் கொரோனாவின் இரண்டாவது அலை அதிதீவிரமடைந்துள்ளது. கொரோனா பாதிப்புக்கள் மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் எச்சரிக்கை செய்யப்படுகிறது. கொரோனா பாதிப்புக் குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம்நேற்றுவெளியிட்டுள்ள அறிக்கையில், நேற்றுக் காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 4.14 லட்சம் பேர் கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா பாதிப்பின் மொத்த எண்ணிக்கையானது 2 கோடியே 14 லட்சத்து 91 ஆயிரத்து 598 ஆக அதிகரித்துள்ளது. ஒரே நாளில் மொத்தம் 3,927 பேர் உயிரிழந்துள்ளனர். மொத்த உயிரிழப்பு எண்ணிக்கையானது 2,34,083 ஆக உயர்ந்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 10 நாள்களாக இந்தியாவில் நாள் தோறும் மூவாயிரத்துக்கும் அதிகமான கொரோனா மரணங்கள் நிகழ்கின்றன என்றும் உலகில் எந்த நாட்டை விடவும் தொடர்ச்சியாக 10 நாள்களில் அதிக எண்ணிக் கையிலான கொரோனா இறப்புக்கள் இந்தியாவில் பதிவாகி இருக்கின்றன என செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

அமெரிக்காவில் 10 நாள்களில் 34,798 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளமையே இதுவரையில் அதிகபட்சஎண்ணிக்கையாகஇருந்துவந்தது. பிரேஸிலில் 32,692 இறப்புக்கள் பதிவாகி இருக்கின்றன என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதே காலகட்டத்தில் மெக்சிகோ மற்றும் இங்கிலாந்தில் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை முறையே 13,897 மற்றும் 13,266 என்று பதிவாகியது.

நாட்டில் மகாராஷ்டிரா மாநிலமானது தொடர்ந்து கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கையில் முன்னிலையில் இருந்து வருவதாகத் தரவுகள் கூறுகின்றன. இங்கு அண்மைய 24 மணி நேரத்தில் மட்டும் மொத்தம் 853 உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. உத்தரப் பிரதேசம், டெல்லி, கர்நாடகாவில் 300 இக்கும் மேற்பட்ட உயிரிழப்புக்களும், சட்டீஸ்கரில் 200க்கும் மேற்பட்ட மர ணங்களும் பதிவாகியுள்ளன. தமிழ் நாட்டில் 195, ராஜஸ்தானில் 161, மேற்கு வங்கத்தில் 117, கேரளாவில் 63, ஜம்மு மற்றும் காஷ்மீரில் 5 மரணங்களும் நிகழ்ந்துள்ளன என தரவுகள் காட்டுகின்றன.

## தமிழகத்தில் மே 10 முதல் ....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி.........)

நீதித்துறை மற்றும் நீதிமன்றங்களும் நடைபெற்று வரும் கட்டடப் பணிகள் போன்றவையும் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படும். ஊடகத் துறையினர் தொடர்ந்து பணியாற்றலாம்.

அரசு ஆணை எண்.348 இன் கீழாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் 20.4.2021 இல் பட்டியலிடப்பட்டுள்ள, தடையின்றி தொடர்ந்து செயல்பட வேண்டிய தொடர் செயல்முறைத் தொழிற்சாலைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மட்டும் செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஊழியர்கள் இந்த நிறுவனங்கள் ஏற்பாடு செய்யும் விசேட அலுவலக வாகனங்களிலோ அல்லது சொந்த வாகனங்களிலோ குறித்த நிறுவனங்கள் வழங்கிய அடையாள அட்டையுடன் செல்ல அனுமதிக்கப்படுகிறது.

திருமணம் மற்றும் திருமணம் சார்ந்த நிகழ்வுகள் (கலந்து கொள்வோர் எண்ணிக்கை 50 நபர்களுக்கு மீறாமல்) மற்றும் இறப்பு சார்ந்த நிகழ்வுகளுக்கு (கலந்து கொள்வோர் எண்ணிக்கை 20 நபர்களுக்கு மீறாமல்) ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுடன் நடத்துவதற்கும் அதில் கலந்துகொள்வதற்கும் எந்தவிதமான தடையுமில்லை.

தொலைத்தொடர்பு மற்றும் அதனைச்சார்ந்த செயல்பாடுகள் அனுமதிக்கப்படும். தரவு மையங்களில் பராமரிப்பு பணி, மருத்துவம், நிதி,வங்கி, போக்குவரத்து மற்றும் இதர அத்தியாவசியப் பணிகளுக்கான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புச் சார்ந்த பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

கிடங்குகளில் சரக்குகளை ஏற்றுவது, இறக்குவது மற்றும் சேமித்து வைப்பது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படும். முழு ஊரடங்கின் போது செயல்பட அனுமதிக்கப்படாத தொழில் நிறுவனங்களிலும் தீ, இயந்திரம் மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பிற்காக மேற்கொள்ள வேண்டிய பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

முழு ஊரடங்கின் போது ரயில் நிலையங்களிலும் துறைமுகங்களிலும் விமான நிலையங்களிலும், சரக்கு போக்குவரத்திற்கும், தொழிலாளர்கள் சென்று வரவும் அனுமதிக்கப்படும். பெற்றோல் மற்றும் டீசல் நிரப்பு நிலையங்கள் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படும். வங்கிகள், தானியங்கி பணம் வழங்கும் மையங்கள், வங்கி சார்ந்த போக்குவரத்து, காப்பீட்டு நிறுவன சேவைகள் அதிகபட்சம் 50 வீத பணியாளர்களுடன் அனுமதிக்கப்படும்.

இயங்க அனுமதிக்கப்பட்டுள்ள கடைகளில் சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட விதிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் அக்கடைகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

முழு ஊரடங்கு 10.05.2021 முதல் அமுல்படுத்தப்படவிருப்பதை முன்னிட்டு, பொது மக்களும், நிறுவனங்களும் தமக்குத் தேவையான முன்னேற்பாடுகளை செய்து கொள்வதற்காக 08.05.2021 சனிக்கிழமை மற்றும் 09.05.2021 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் அனைத்துக் கடைகளும், நிறுவனங்களும் வழக்கம் போல காலை 06.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை இயங்க அனுமதிக்கப்படுகின்றன.

கொரோனா மேலாண்மைக்கான தேசிய வழிகாட்டு நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி, பொது இடங்களில் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியினை கடைப்பிடிப்பது, கைகளை அடிக்கடி சோப்பு மற்றும் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்வது மற்றும் கூட்டங்களைத் தவிர்ப்பது உள்ளிட்டவற்றை கட்டாயம் பின்பற்ற வேண்டும். மேலும், நோய்த்தொற்று அறிகுறிகள் தென்பட்டவுடன், பொதுமக்கள் உடனே அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடி மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சைகளைப் பெறவேண்டும்.

இந்த அறிவுறுத்தல்களை உள்ளடக்கியதாக தமிழக அரசின் அறிக்கை வெளியாகியுள்ளது.

## புதுச்சேரி முதல்வராக ரங்கசாமி பதவி ஏற்றார் தென் மாநிலங்களில் பா.ஜ.க காலூன்றுகிறது




புதுச்சேரி மாநிலத்தின் முதல்வராக நான்காவது முறையாக ரங்கசாமி நேற்று பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு ஆளுநர் தமிழிசை சவுந்தர்ராஜன் தமிழிலேயே பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில் என்.ஆர். காங்கிரஸ் 10 இடங்களிலும், பா.ஜ.க. 6 இடங்களிலும் என பெரும்பான்மைக்குத் தேவையான 16 இடங்களில் வெற்றி பெற்றன. இதைத்தொடர்ந்து, ஆளுநர் மாளிகை வளாகத்தில் நேற்று மதியம் முதல்வராகரங்கசாமிபதவிஏற்றுக்கொண்டார். கொரோனா பரவல் நிலையை கருத்தில் கொண்டு எளிமையாக 20 நிமிடங்களில் விழா நிறைவு பெற்றது. முதல்வர் ரங்கசாமியுடன் அமைச்சர்கள் யாரும் நேற்று பதவி ஏற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியின் புதிய அமைச்சரவை பற்றி பேட்டியளித்தமத்தியஉள்துறைஇணையமைச்சர் கின் ரெட்டி, 'என்.ஆர் காங்கிரஷுக்கு 3 அமைச்சர்கள் பதவி, பா.ஜ.க.வுக்கு ஒரு துணை முதல்வர் பொறுப்பு மற்றும் 2 அமைச்சர்கள் பதவி ஏற்பதற்காக பேச்சு நடத்தி முடிவு செய்துள்ளோம். ஓரிரு நாள்களில் அமைச்சரவை பொறுப்பேற்கும். மாநில மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும். தென் மாநிலங்களில் முதலில் கர்நாடகாவில் பா.ஜ.க. ஆட்சி அமைத்துள்ளது.

தொடர்ந்து, இரண்டாவதாக புதுவையிலும் ஆட்சி அமைத்திருப்பது பா.ஜ.கவுக்கு பெரும் மகிழ்ச்சியாகும். தமிழகத்திலும் தாமரை காலூன்றியுள்ளது. விரைவில் தெலுங்கானாவிலும் பா.ஜ.க. வளரும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.


## மேற்கு வங்க தேர்தல் வன்முறைகள் மத்திய அரசுக் குழு நேரில் விசாரணை



சட்டமன்றத் தேர்தல் காலத்தில் மட்டுமல்லாது முடிவுகள் வெளியானபோதும் மேற்கு வங்கத்தில் பல வன்முறைச் சம்பவங்கள் நடந்தன என செய்திகள் வெளியாகின. இந்த வன்முறைச் சம்பவங்களில் 16 பேர் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து விரிவான விசாரணை மேற்கொள்ள, மத்திய உள்துறை அமைச்சகம் நான்கு பேர் கொண்ட குழுவை அமைத்தது. இந்த மத்திய அரசுக் குழு நேற்று முன்தினம் மேற்கு வங்கத்துக்குச் சென்றதாகவும் வன்முறைச் சம்பவங்கள் நடந்த தெற்கு 24 பர்கானஸ் மற்றும் வடக்கு 24 பர்கானஸ் மாவட்டங்களில் நேரில் ஆய்வை மேற்கொண்டதாகவும் செயதிகள் வெளியாகியுள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தார் மற்றும் உள்ளூர் மக்களிடமும் அவர்கள் விசாரணை நடத்தியுள்ளனர் என குறிப்பிடப்படுகிறது.

# மட்ரிட் ஓபின் டென்னிஸ் தொடர் இறுதிப்போட்டி இன்று அஷ்லெ பார்டியை எதிர்கொள்கிறார் அர்யனா சபாலங்கா





ஸ்பெயினில் நடந்துவரும் மட்ரிட் மகளிர் ஓபின் டென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்தில் இன்று அஷ்லெ பார்டி – அர்யனா சபாலங்கா இருவரும் மோதவுள்ளனர்.

உலகின் முதல் நிலை வீராங்கனையான ஆஸ்ரேலியாவின் அஷ்லெ பார்டி அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் பௌலா படோசாவை 6 – 4, 6 – 3 என நேர் செட்களில் வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார். அஷ்லெ பார்டி, தான் இறுதியாக விளையாடிய 9 ஆட்டங்களில் தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளார். அதற்கு முன்னதாக அவர் சார்லெஸ்டன் ஓபின் காலிறுதியில் பௌலா படோசாவிடம் 6 – 4, 6 – 3 என நேர் செட்களில் தோற்றிருந்தார். அதன் பின்னர்அவர் தோல்வியைச் சந்திக்கவில்லை.

அதே போல் உலகின் 7 ஆம் நிலை வீராங்கனையான பெலாரஸ் நாட்டின் அர்யனா சபாலங்கா அரையிறுதி ஆட்டத்தில் அனஸ்டசியா பவ்லிசெகோவை 6 – 2, 6 – 3 என நேர்செட்களில் வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றார். அர்யனா, தான் விளை யாடிய கடைசி 5 ஆட்டங்களில் தொடர்ந்து வென்றுள்ளார். அவர் இறுதியாக ஜேர்மனியில் நடந்தஸ்டட்கார்ட் ஓபின் இறுதியாட்டத்தில் அஷ்லெ பார்டியிடம் 3 – 6, 6 – 0, 6 – 3 என்ற செட்களில் போராடித் தோற்றிருந்தார்.

அஷ்லெ பார்டி – அர்யனா சபலங்கா இருவரும் 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரை 7 ஆட்டங்களில் நேருக்கு நேர் மோதி யுள்ளனர். அவற்றில் 4 ஆட்டங்களில் அஷ்லெ பார்டியும், 3 ஆட்டங்களில் அர்யனா சாபலங்காவும் வெற்றிபெற்றுள்ளனர்.

இன்று 8 ஆவது முறையாக 25 வயதான அஷ்லெயும், 23 வயதான அர்யனாவும் மீண்டும் இறுதிப் போட்டி ஒன்றில் மோதுகின்றனர். ஜேர்மனி ஸ்டட்கார்ட் ஓபினில் தோற்றதற்கு அர்யனா சபாலங்கா பதிலடி தருவாரா? இல்லை அஷ்லெ பார்டி தனது வெற்றிப் பணயத்தைத் தொடர்வாரா என்பதை அறிய டென்னிஸ் ரசிகர்கள் மத்தியில் மிகுந்த ஆர்வம் காணப்படுகிறது. இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

# டெஸ்ட் உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் விளையாடவுள்ள இந்திய அணி வீரர்களின் பெயர் அறிவிக்கப்பட்டது



இங்கிலாந்தில் நடைபெறவுள்ள முதலாவது ஐ.சி.சி. டெஸ்ட் உலகக் கிண்ண டெஸ்ட் சம்பியன் தொடரின் இறுதிப்போட்டியில் விளையாடவுள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக ஒருநாள் மற்றும் ரி20 கிரிக்கெட் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடாத்தப்பட்டு வரும் நிலையில், முதல்முறையாக டெஸ்ட் போட்டிக்கும் உலகக் கிண்ணத் தொடர் நடைபெற்றுவருகிறது. ஐ.சி.சி. உலகக் கிண்ண டெஸ்ட் சம்பியன்ஷிப் என்ற பெயரில் நடைபெறும் இந்த தொடர் 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கியது. தொடரின் இறுதி லீக் போட்டி சில நாள்களுக்கு முன்பு இலங்கை – பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடைபெற்று முடிந்தது. ஆனாலும் இந்தியா – இங்கிலாந்து டெஸ்ட் தொடர் முடிந்தபோதே, புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களைப் பிடித்த இந்திய, நியூசிலாந்து அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுவிட்டன.

இறுதிப்போட்டி இங்கிலாந்தில் உள்ள சவுத்ஹாம்டன் அரங்கில் ஜூன் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அந்தப்போட்டியில் பங்கேற்கவுள்ள இந்திய அணிக்கான வீரர்களின் பட்டியலை பி.சி.சி.ஐ. நேற்று அறிவித்தது.

கப்டன் கோலி தலைமையிலான அணியில் ரஹானே, ரோகித் ர்மா, சுப்மான் கில், மயங்க் அகர்வால், புஜாரா, ஹனுமா விகாரி, ரிப் பன்ட், அஷ்வின், ஜடேஜா, அக்சர் பப்டேல், வொஷிங்டன் சுந்தர், பும்ரா, இஷாந்த் ஷர்மா, ஷர்துல் தாகூர், உமேஷ் யாதவ் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். ஓய்விலுள்ள கே.எல்.ராகுல், ரித்திமான் சஹா இருவரும் உடல் தகுதி பெறுவதைப் பொறுத்து அணியில் இடம் பிடிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைத் தவிர அபிமன்யூ ஈஸ்வரன், பிரசித் கிருஷ்ணா, அவேஷ் கான், அர்ஜன் நாகவாஸ்வாலா ஆகியோர் பதில் ஆட்டக்காரர்களாக இங்கிலாந்து செல்வார்கள். உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் இதே அணியே பங்கேற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக போக்குவரத்துக் கட்டுப்பாடுகள், பயோ பபிள் பாதுகாப்பு போன்றவை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுவதால் 24 பேர் கொண்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 66 வருடங்களுக்குப் பின்னர் கூடிய வயதில் அறிமுகம் பாகிஸ்தான் வேகப் பந்துவீச்சாளர் தபிஷ்கானின் பெருமை



கடந்த 66 வருடங்களில் பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியில் கூடிய வயதில் அறிமுகமாகும் வீரர் என்ற பெருமையை வேகப்பந்து வீச்சாளர் தபிஷ்கான் பெற்றிருக்கிறார். சிம்பாப்வே அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகுவதன் மூலம் இந்தப் பெருமை இவருக்குக் கிடைத்திருக்கிறது.

1955 இல் மிரான் பக்ஷ என்ற வீரர் 47 வயதில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தனது அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார். இவருக்கு அடுத்தபடியாக 44 வயதில் அமிர் இலாஹி என்ற வீரர் 1952 இலும், குல் மொஹமட் என்பவர் ஆஸ்ரேலியாவுக்கு எதிராக 1956 இலும் தமது டெஸ்ட் கிரிக்கெட் அறிமுகத்தை மேற்கொண்ட பாகிஸ்தான் வீரர்களாக இருந்தனர். 36 வயது 146 நாள்களில் அறிமுகமாகும் வீரர் என்ற பெருமையோடு இந்த வரிசையில் மூன்றாவது இடத்தை தபிஷ்கான் பெற்றிருக்கிறார்.

598 முதல் தரப் போட்டி விக்கெட்டுக்களை எடுத்த பின்னர் டெஸ்ட் அறிமுகத்தினை மேற்கொள்ளும் ஆசிய கிரிக்கெட் வீரர் என்ற பெருமையும் இவரைச் சேர்கிறது. இதற்கு முன்னர் இந்தப் புகழ் இலங்கை அணியின் மலிந்த புஸ்பகுமார வசம் இருந்தது. 2017 இல் இந்தியாவுக்கு எதிராக தனது டெஸ்ட் கிரிக்கெட் அறிமுகத்தைச் செய்தபோது இவர் 558 முதல் தரப் போட்டி விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

தபிஷ்கானின் 598 முதல் தர போட்டிகளின் விக்கெட்டுக்கள் என்பவை, இங்கிலாந்து அணியைத் தவிர்த்து அதிக முதல் தர விக்கெட்டுக்களை எடுத்த பின்னர் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமாகும் இரண்டாவது வீரர் என்ற சாதனையையும் இவருக்குக் கொடுத்துள்ளன. இந்த வரிசையில் முதலிடத்தில் அயர்லாந்தின் ரிம் முர்டாக் இருக்கிறார். 2018 இல் டெஸ்ட் அறிமுகத்தை இவர் மேற்கொண்டபோது வீழ்த்தியிருந்த முதல் தரப் போட்டி விக்கெட்டுக்களின் எண்ணிக்கை 712 ஆகும்.

# கொரோனா தடுப்புப் பணி நிதி திரட்டும் முயற்சி விராட் கோஹ்லி, அனுஷ்கா தம்பதி 2 கோடி உதவி

இந்தியாவில் கொரோனாத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் விராட் கோஹ்லி – அனுஷ்கா தம்பதியினர் 2 கோடி ரூபா நிதியுதவி அளித்துள்ளனர்.

இது குறித்து அனுஷ்கா சர்மா தன்னுடைய இன்ஸ்டகிராம் பதிவில் காணொலியொன்றை வெளியிட்டுள்ளார். அதில், நம்முடைய நாடு கொரோனாவின் இரண்டாம் அலையை எதிர்த்துப் போராடி வருகிறது. நம்முடைய மருத்துவக் கட்டமைப்பு மிகப் பெரிய சவால்களை எதிர்கொண்டுள்ளது. மக்கள் அவதியுறுவதைப் பார்க்கும்போது பெரும் துயரமாக இருக்கிறது. இதனால் நானும் விராட் கோஹ்லியும் இணைந்து கொரோனாத் தடுப்புப் பணிக்காக நிதி திரட்டும் இயக்கத்தை தொடங்குகிறோம் என்று தெரிவித்துள்ளார்.



**InThisTogether** என்ற ஹஷ்டக் மூலம் 'கெட்டோ' தொண்டு நிறுவனத்துடன் இணைந்து இந்த முயற்சியை மேற்கொள்கிறோம். இந்த கடினமான காலத்தை நாம் எல்லோரும் இணைந்து எதிர்கொள்வோம். இந்தியர்களான நாம் இந்தியர்களுக்காக துணை நிற்போம். உங்களுடைய சிறு பங்களிப்பு இந்த கடினமான காலத்தை எதிர்கொள்வதற்கு உதவும் என்றும் அவர் கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்.

# சமலுடனான சந்திப்பு கொழும்பை பாதுகாக்கவே!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம்

தமிழ் அரசியல்வாதிகளிற்கும் சமல் ராஜபக்ஷவிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு கொழும்பைப் பாதுகாக்கும் முயற்சியே என்று வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் அரசியல்வாதிகள் அண்மையில் சமல் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டமை தொடர்பாக அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

இம்மாதம் 3 ஆம் திகதி , கொவிட் – 19 தாக்கத்தின் மத்தியிலும், இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே மிக முக்கியமான சந்திப்பு லண்டனில் நடந்தது. சீன ஆக்கிரமிப்பை ஆதரிக்கும் இலங்கையைத் தண்டிப்பதற்குத் தமிழர்களின் துன்பத்திற்கான நீதியை ஒரு துரும்பாகப் பயன்படுத்துவது பற்றி அங்கு பேச்சுக்கள் நடந்தன.

இதேவேளை, தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும், நில அபகரிப்பு என்ற தலைப்பில் சிங்கள அமைச்சர் சமல் ராஜபக்ஷவை சந்திக்க ஒன்றுபட்டுள்ளனர். தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து பேசலாம், வேலை செய்யலாம் என்பதையே இது உலகுக்குக் காட்டியுள்ளது.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க எந்தவொரு வெளிநாட்டு ஈடுபாடும் தேவையில்லை என்பது தமிழ் அரசியல் தலைவர்களின் செய்தி. சிங்களவர்களுடன் பேசுவதன் மூலம் பலனளிக்கும் எந்தச் செயற்பாடும் இடம்பெறாது என்பதை 73 ஆண்டுக்கால பாடம் நமக்குக் கற்பித்திருக்கின்றது.

தமிழ் அரசியல்வாதிகள் தமிழர்க ளின் அரசியல் உரிமைகளுக்காகவோ அல்லது தமிழ் தாயகத்தில் அபிவிருத்திக்காக அல்லது வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மாகாணசபைகளை அமைப்பதற்காகவோ ஒன்று கூடியதை நாங்கள் பார்த்ததில்லை.

இவர்களின் சந்திப்பானது இலங்கையில் அமெரிக்கா அல்லது இந்தியாவின் தலையீடு தேவையில்லை என்ற விம்பத்தை உலகிற்குக் கூறியுள்ளது. தமிழர்களுக்கான அரசியல் சுதந்திரத்தில் தமிழ் அரசியல்வாதிகள் ஆர்வம் காட்டவில்லை என்பதுடன் எந்தவொரு இறையாண்மை அடிப்படையிலான தீர்விற்கும் தமிழ் அரசியல்வாதிகள் பயப்படுகிறார்கள். போலவே தோன்றுகிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் மனித உரிமை பேரவை அமர்வின் போது, அதே தமிழ் அரசியல்வாதிகள் சிங்கள அமைச்சரைச் சந்தித்தனர். இது ஐ.சி.சிக்கு பரிந்துரைப்பவரின் சர்வதேச இழப்பை ஏற்படுத்தியது.

அதற்குப் பதிலாக பொறுப்புக்கூறல் விடயம் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது. எனவே இவர்களின் சந்திப்பு கொழும்பைப் பாதுகாக்கும் முயற்சியாகவே நாம் பார்க்கிறோம்.

இதனைத் தமிழர்களுக்கு வெளிப்படுத்துகிறோம். விழிப்புத்தான் ஓர் இனத்தின் விடுதலை. பத்திரிகையாளர் நிமலராஜனின் நீதியும் சர்வதேச ஈடுபாட்டைத் தமிழ் அரசியல்வாதிகளுக்கு உணர்த்தியிருக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

# வற்றாப்பளைப் பொங்கலுக்கு பொதுமக்கள் பங்குபற்றத் தடை

முல்லைத்தீவில் இதுவரை 16 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில்,பொது மக்களை சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போதைய கொவிட் 19 நிலைமைகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் நேற்று வெள்ளிக்கிழமை ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

வற்றாப்பளை உற்சவத்தில் பொதுமக்கள் கலந்துகொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 16 பேர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்கள். 101 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

மாங்குளம் தள வைத்தியசாலையில் சிற்றூழியராக பணியாற்றிய ஒருவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து அதனுடன் தொடர்புடைய 12 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாங்குளம் மருத்துவமனை செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிற்றூழியர் ஒருவருக்கும் தொற்று இனங்காணப்பட்டுள்ளது.

மாஞ்சோலை மருத்துவமனையில் தொற்று பாதுகாப்புத் தொடர்பில் பிராந்திய சுகாதார பணிமனையினர், வைத்திய அதிகாரிகள் மேலதிக நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். முல்லைத்தீவு மாவட்ட பொது மக்களுக்கான அறிவித்தலாக அநாவசியமாக வீதிகளில் செல்ல வேண்டாம், அத்தியாவசியமாக வெளியில் வரும்போது முகக்கவசம் அணிந்து சுகாதார நடவடிக்கையைப் பின்பற்ற வேண்டும்.

கடந்த காலங்களில் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் குறைந்திருந்தாலும் தற்போது அதிகரித்து வருகின்றது. மக்கள் பொது இடங்களுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ளவும்.

எதிர்வரும் கிழமைகளில் நடைபெறவுள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வு தொடர்பிலும் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

முப்படையினர், சுகாதாரப் பிரிவினர், ஆலய நிர்வாகத்தினர் ஆகியோர் இதில் கலந்து கொண்டுள்ளார்கள்.இந்த நிகழ்வுகளிலும் பொதுமக்கள் பங்குபற்றுவதைத் தவிர்த்து கொள்ளுமாறும் ஆலய நிர்வாகத்தினரால் கிரியைகள் மட்டும் இடம்பெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் நால்வர் கைது!

வவுனியாவில்சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்லபட்ட 20 மாடுகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற வாகனம் ஒன்றை கனகராயன் குளம் பகுதியில் வழிமறித்த பொலிஸார் நேற்றுவெள்ளிக்கிழமை சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த வாகனத்தில் போலியான அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி மாடுகள் கடத்திச்செல்லப் பட்டுள்ளமை தெரியவந் துள்ளது.

வாகனத்தில் இருந்தவர்களை கைது செய்த பொலிஸார் 16 மாடுகளையும்,அவற்றை கடத்திச்செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட லொறி ஒன்றையும் மீட்டுள்ளனர்.

இதேவேளை,கடந்த வியாழக்கிழமை உரிய நடைமுறைகளை பேணி கொண்டு செல்லப்படாத நான்கு மாடுகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளமையுடன், இருவரைக் கைதுசெய்திருந்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் எனப்பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

# இடமாற்றம் வழங்கப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் இடமாற்றம் வழங்கப்படாத உத்தியோகத்தர்களின் பணி இடமாற்றம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப் படும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சில பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அலுவலக உதவியாளர்கள் 10 வருடங்களைத் தாண்டியும், அதே பிரதேசங்களில் கடமையாற்றுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பில் அரச அதிபரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இடமாற்றங்கள் தொடர்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக உரிய காலப்பகுதியை நிறைவு செய்த உத்தியோகத்தர்கள் பணியிட மாற்றத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அவ்வாறு விண்ணப்பிக்கும் போது சரியான தகவல்களை வழங்காத பட்சத்தில் இடமாற்றங்கள் சில வேளைகளில் பின் செல்ல வாய்ப்பு உள்ளது.

ஆகவே இடமாற்றங்கள் உரிய காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். சில தவறுகள் இருக்கத்தான் செய்கின்ற நிலையில் அது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இளைஞர் ஒருவர் துன்புறுத்தல் குற்றச்சாட்டில் ஒருவர் கைது!

வவுனியா – ஆச்சிபுரம் பகுதியில் இளைஞர் ஒருவரைத் துன்புறுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆச்சிபுரம் பகுதியில் இளைஞர் ஒருவரை துன்புறுத்தி அவரை நிர்வாணமாக்கி காணொலியை பதிவு செய்து சமூக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளார் எனக் கைது செய்யப்பட்ட நபர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் ஆச்சிபுரம் பகுதி இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்து இன்று நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.05.2021இல் வெளியிடப்பெற்றது.